# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044 – 22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி : www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.175/பேரூ/2023

நாள்: 23.08.2023

திரு. எஸ். மோகன்,
அரகண்டநல்லூர்
கள்ளக்குறிச்சி மாவட்டம். .... மனுதாரர்

செயல் அலுவலர்,
அரகண்டநல்லூர் பேரூராட்சி,
கள்ளக்குறிச்சி மாவட்டம். .... எதிர்மனுதாரர்

விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம், அரகண்டநல்லூர், காமராஜர் ரோடு, கதவு எண் 158/219 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. எஸ். மோகன் என்பவரது 05.06.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.06.2023 அன்று பெறப்பட்டு, 175/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம், அரகண்டநல்லூர் காமராஜர் ரோடு, கதவு எண் 158/219 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. எஸ். மோகன் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூர் முதல்நிலை பேரூராட்சியானது மிகவும் நலிவடைந்த பேரூராட்சி. இந்த பேரூராட்சியின் நிலை 40 வருடத்திற்கு முன் எப்படி இருந்ததோ அதே நிலையில்தான் தற்போது உள்ளது. இந்த நிலைமைக்கு காரணம் இதில் பணிபுரிந்த ஓரிரு செயல்அலுவலர்கள் தவிர மற்ற செயல் அலுவலர்கள் தான் காரணம். போலி பில் வைத்து பணத்தைக் கொள்ளையடித்ததன் காரணத்தினால் இந்த பேரூராட்சி முன்னேற்றம் அடையவில்லை. இந்த பேரூராட்சியின் பொது நிதி வங்கிக் கணக்கில் பணம் சேர்ந்தால் போதும் போலி வவுச்சர் வைத்து காசோலை மூலம் பணம் திருடிவிடுவார்கள். இந்த செயலுக்கு உறுதுணையாக இருநாள் வரையில் இருந்துகொண்டிருக்கும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் தணிக்கைத்துறை உதவி இயக்குநர் ஆகிய இருவர்தான் காரணம். மேற்கண்ட இருவரும் கையூட்டு பெற்றுக்கொண்டு இந்த தவறை அனுமதித்து

வருகிறார்கள். அரகண்டநல்லூர் பேரூராட்சிக்கு, அரசு இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒருதடவை பேரூராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சம்பளமும், பேரூராட்சிக்கு உண்டான மின்கட்டணத்திற்கு Devolution Fund அனுப்புகிறது. அப்படி அரசு இந்த பேரூராட்சிக்கு Devolution Fund அனுப்பாவிட்டால் சம்பளம் கொடுக்க முடியாது, மின் கட்டணமும் செலுத்த முடியாது. செயல் அலுவலர் திரு. முருகன் என்பவர் அரசால் மின் கட்டணத்திற்கு அனுப்பிய பணத்தை மின் வாரியத்திற்கு செலுத்தாமல் பாக்கி வைத்துவிட்டு அந்த பணத்தை வவுச்சர் மூலம் கொள்ளையடித்துள்ளார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் செயல் அலுவலர் திரு. முருகன் பணிபுரிந்த காலத்தில் மிகமிக அதிக ஊழல் நடந்துள்ளது. உதாரணமாக 01.12.2021 முதல் 30.12.2021 வரை ஒரு மாதத்திற்கு பைப்லைன், தெருமின் விளக்கு, பொது சுகாதார பொருட்கள், கணினி பழுது பார்த்தல் வரை தோராயமாக ரூ.7,06,000/- வரை போலி பில் வைத்து பணம் கொள்ளையடித்து உள்ளார்கள். இதேபோல் 01.12.2021 முதல் 30.12.2022 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு மாதத்திற்கும் தோராயமாக ரூ.7 இலட்சம் முதல் ரூ.8 இலட்சம் வரை போலி பில் வைத்து பணம் கொள்ளையடித்துள்ளார்கள். மிகமிக முக்கியமானது என்னவென்றால், இந்த பேரூராட்சி சம்பளத்திற்கே வருவாய் இல்லாத பேரூராட்சி ஆகும். ஆனால் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர் மூலம் Counter sign பெற்று போலியாக பில் வைத்து உதவி இயக்குநர் அனுமதியுடன் தோராயமாக ரூ. 2.50 இலட்சம் முதல் ரூ.3.00 இலட்சம் வரை மாதா மாதம் பணம் கொள்ளையடித்துள்ளார்கள். அதன் விவரம் நகல் இத்துடன் இணைத்துள்ளேன்.

இந்த அரகண்டநல்லூர் பேரூராட்சி மட்டுமல்லாமல் விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம், கடலூர் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களிலுள்ள அனைத்து பேரூராட்சிகளும் செயல் அலுவலர் மூலம் ஒரு மாதத்திற்கு ரூ.2.50 முதல் ரூ.3.00 இலட்சம் வரை இரண்டு அல்லது நான்கு வரை போலி பில்லுக்கு Counter sign பெற்று பணம் கொள்ளையடித்து வருகிறார். இதில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் 13%, தணிக்கை துறை உதவி இயக்குநர் 10% பொருட்கள் வாங்காமலேயே வாங்கியதாக பில் கொடுக்கும் கம்பெனிகளுக்கு 12% முதல் 18% வரை போலி பில் கொடுப்பதற்கு மேற்கண்ட சதவீதத்தில் பங்கு பிரித்துக் கொடுத்தது போக மீதி செயல் அலுவலர் பணத்தை எடுத்துக்கொள்வார். இதில் யோசிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், ஒரு மாதத்திற்கு தெரு மின் விளக்கு வாங்கியதாக செலவுத்தொகை காண்பிப்பார்கள். அடுத்த மாதத்திற்கு குடிநீர் பழுதுபார்த்ததாக கணக்கு காண்பிப்பார்கள். அதற்கடுத்த மாதத்திற்கு பொது சுகாதாரத்திற்கு பொருட்கள் வாங்கியதாக கணக்கு காண்பிப்பார்கள். இப்படி சுழற்சி முறையில்தான் கொள்ளையடித்து வருகிறார்கள். ஒரு மாதத்திற்கு மட்டும் கடலூர் மண்டலம் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தோராயமாக செயல் அலுவலரின் மூலமாக ரூ.60 இலட்சம் முதல் ரூ.95 இலட்சம் வரை பணம் லஞ்சமாக பெற்று வருவது தெரிய வருகிறது. உதாரணத்திற்கு அரகண்டநல்லூர் பேரூராட்சியின் தெரு மின் விளக்குகள் 282 உள்ளது. அதில் டியூப்லைட் 36, 24 வாட்ஸ் 102, 50 வாட்ஸ் 8, மீதி விளக்கு 36 வாட்ஸ் பல்புகள் உள்ளது. ஒரு மாதத்திற்கு பழுதுபார்க்கும் தெரு மின் விளக்குகளின் தொகை ரூ.30,000 முதல் ரூ.35,000 வரை செலவாகும். ஆனால் செயல் அலுவலர் போலி பில் வைத்து ரூ.70,000 முதல் ரூ.80,000 வரை செலவுத்தொகை காண்பித்து பணத்தைக் கொள்ளையடித்து வருகிறார். மேலும் 4.3.2022 முதல் 28.11.2022 வரை

உதவி இயக்குநரின் Counter Sign அனுமதி பெற்று ரூ.13,58,680/—ஐ தெரு மின் விளக்கு பொருட்கள் வாங்கியதாக போலி பில் வைத்து பணம் திருடியுள்ளார்கள். இதேபோல் ஒரு மாதத்திற்கு குடிநீர் குழாய் மற்றும் பொது சுகாதார பொருட்கள் வாங்கியதாக பணத்தைக் கொள்ளையடித்துள்ளார்கள். இவ்வளவு ரூபாய்க்கு பொருட்கள் வாங்கியிருந்தால் பழைய பொருட்கள் எவ்வளவு ரூபாய்க்கு ஏலம் போனது? இல்லையென்றால் இருப்பில் உள்ளதா? என்பது குறித்து என்னை வைத்து ஆய்வு செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே, அய்யா அவர்கள் 01.12.2021 முதல் 30.12.2022 வரை செயல் அலுவலர் திரு.எம். முருகன் என்பவர் இலட்சக்கணக்கில் பணம் கொள்ளையடித்துள்ளார். மேலும், இவர் மீது துறை ரீதியான விசாரணை செய்யும்போது என்னை அழைத்து விசாரணை செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும், இவர் மீது நடவடிக்கை எடுக்காதபட்சத்தில் இந்த ஊழல் தொடர்பாக என்னிடம் உள்ள ஆதாரங்களின் அடிப்படையில் நான் நீதிமன்றம் செல்ல நேரிடும் என்பதையும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விளக்க அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் அரகண்டநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) இதற்கிடையில் மனுதாரர் திரு. எஸ்.மோகன் என்பவர் தனது 07.07.2023 நாளிட்ட கடிதத்தில் அரகண்டநல்லூர் பேரூராட்சியில் மேற்கொண்ட செலவினங்களில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என கீழ்க்கண்டவாறு இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூர் பேரூராட்சியில் செலவினங்களில் 12/2021 மாதம் முதல் 01/2023 மாதம் முடிய பல்வேறு முறைகேடுகள் நடந்ததாக 08.05.2023 தேதியிட்ட பதிவு தபால் மூலமாகவும், இயக்குநர் அலுவலகத்திற்கு நேரிடையாகவும் புகார் அளித்து இருந்தேன். அதனை தொடர்ந்து பேரூராட்சிகளின் இயக்குநரின் ஆய்வு அலுவலர் ஆய்வு மேற்கொண்டபோது 07.07.2023 அன்று என்னை நேரில் அழைத்து முறைகேடுகள் குறித்து விளக்கத்தினை கேட்டறிந்தார். 10.05.2022, 29.07.2022, 07.02.2023 மற்றும் 08.05.2023 கடிதங்களில் கூறிய அனைத்து செலவினங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போதுதான் நான் பேரூராட்சியின் செலவினங்களின் உண்மைத் தன்மையினை அறிந்து கொண்டேன். நான் மனுவில் கூறியதுபோல் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை என்பதை அறிகின்றேன். நான் தவறுதலாக சிலரின் துண்டுதலின் பேரில் தவறான மனுவினை அளித்துவிட்டேன். நான் கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்கள் தெருமின்விளக்கு செலவினம், குடிநீர் திட்ட செலவினம் மற்றும் பொதுசுகாதார செலவினங்களுக்கு நிர்வாக அனுமதி வழங்கும்போது 13 சதவீதம் பெறுவதாகவும், அரகண்டநல்லூர் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் திரு. மா. முருகன் அவர்களின் பேரில் முன்னுக்கு முரணான தவறான தகவல்களை புகார்களாக கூறியிருந்தேன். ஆனால் உதவி இயக்குநர், அரகண்டநல்லூர் பேரூராட்சி அலுவலகத்திற்கும் எவ்வித தொடர்பு இல்லை. தணிக்கை ஆய்வாளர்களால் மட்டுமே தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உதவி இயக்குநர் பேரூராட்சி அலுவலகத்திற்கு தணிக்கை மேற்கொள்ளப்படுவதில்லை. அதுபோல எவ்வித

முறைகேடுகளும் நடைபெறவில்லை என்பதையும், இப்போது தான் அறிந்து கொண்டேன். இனிவரும் காலங்களில் உண்மைநிலை அறியாமல் இதுபோன்ற புகார் மனுக்களை அனுப்பமாட்டேன் என்பதை தங்களுக்கு பணிந்து எனது முழுமனதுடன் யாருடைய நிர்ப்பந்தமும் இன்றி என்னுடைய சுய நினைவோடு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இதுபோன்ற தவறான புகார் மனு அளிக்கமாட்டேன். மீறினால் என் மீது உரிய நிர்வாக ரீதியான நடவடிக்கை எடுக்கலாம் என முழு மனதோடு தெரிவித்துள்ளார்

4)அரகண்டநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் தமது 13.07.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

திரு. எஸ். மோகன் என்பவர் அரகண்டநல்லூர் பேரூராட்சியின் செயல் அலுவலர்களை மிரட்டும் நோக்கத்துடனே இதுபோன்ற புகார் மனுக்களை தொடர்ந்து முன்னாள் செயல் அலுவலர்கள் திரு.மா.செல்லப்பிள்ளை மற்றும் திரு. த. அண்ணாதுரை மற்றும் பதிவறை எழுத்தர் திரு. ஆர். ராஜேஷ் என்பவரின் மீது நிர்வாகத்திற்கு குந்தகம் விளைவிக்கும் நோக்கத்துடனும், அலுவலர்களை மிரட்டி கையூட்டு பெறுவதற்காக திட்டப்பணிகளின் குறைபாடுகள், மதிப்பீடு நகல் மற்றும் செலவின விவரங்கள் கோரி புகார் மனுக்கள் அனுப்புவதையே வாடிக்கையாக வைத்துள்ளார். மேலும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் மனுதாரர் திரு. எஸ்.மோகன் தனது 07.07.2023 நாளிட்ட இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ள கடிதத்தில் உள்ளவற்றையே திரும்ப தெரிவித்து, மனுதாரர் தவறாக புகார் மனு அனுப்பியதாக தெரிவித்துள்ள நிலையில் இப்புகார் மனுவில் தெரிவித்துள்ளபடி முறைகேடுகள் எதும் நடைபெறவில்லை என்பதை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

5) மனுதாரருக்கும் அரகண்டநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கும் 02.08.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.07.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**6) 02.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் திரு. எஸ்.மோகன் என்பவர் ஆஜராகவில்லை.**

**7)அரகண்டநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் 02.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:-**

அரகண்டநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலராக (பொறுப்பு) கடந்த 1 மாத காலமாக பணியாற்றி வருகிறேன். அரகண்டநல்லூர் பேரூராட்சியில் மொத்தம் 12 வார்டுகளும், 5 ஆயிரம் பேர்களும் வசிக்கின்றனர். அரகண்டநல்லூர் பேரூராட்சியில் தெரு மின் விளக்கு பழுது பார்த்தல், பொது சுகாதாரப் பொருட்கள் வாங்குவது, கணினி பழுதுபார்த்தல் மற்றும் பைப் லைன் மாற்றுதல் போன்றவற்றிற்கு மன்றத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பொருட்கள் வாங்குவதற்கும் மற்றும் சிறு சிறு பழுதுகளை மேற்கொள்வதற்கும் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்ததாரால் பணி மேற்கொள்ளப்படுகின்றன. மேற்கண்ட செலவினத்திற்கான பட்டியலில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் Counter Sign பெறப்பட்டு, பில் தொகைகள் ஒப்பந்ததாருக்கு அளிக்கப்படுகின்றன. மேலும் அரகண்டநல்லூர் பேரூராட்சியில் உள்ள வார்டுகளுக்கான மின் கட்டணம் தவறாமல் மின் வாரியத்திற்கு நாளது தேதிவரை செலுத்தப்பட்டு வருகிறது என்றும் மேலும், வாங்கப்படும் பொருட்கள் குறித்து

பேரூராட்சியின் பதிவேட்டில் பதியப்பட்டு வருகிறது எனவும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் 2021–22ம் ஆண்டிற்கான உள்ளாட்சி தணிக்கை மேற்கொள்ளப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**8) மனுதாரர் 02.08.2023 அன்றைய விசாரணையில் ஆஜராகாமல் இருந்ததைத் தொடர்ந்து, அவருக்கு மற்றொரு வாய்ப்பு அளிக்கும் வகையில் இம்முறைமன்ற 03.08.2023 நாளிட்ட அறிவிப்பில் 08.08.2023 அன்றைய விசாரணைக்கு ஆஜராகக்கோரி மனுதாரருக்கு மீண்டும் அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி 08.08.2023 அன்றைய விசாரணையிலும் மனுதாரர் ஆஜராகவில்லை.**

9) மனுதாரரின் புகார் மனு, அரகண்டநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூரைச் சார்ந்த மனுதாரர் திரு. எஸ். மோகன் என்பவர் தனது 05.06.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் அரகண்டநல்லூர் பேரூராட்சியில் 01.12.2021 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் மாதத்திற்கு மாதம் ரூ. 7 இலட்சம் முதல் ரூ.8இலட்சம் வரை போலியான பட்டியல்கள் (Bills) தயாரித்து செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டதாக முறைகேடுகள் செய்யப்பட்டுள்ளன என புகார் தெரிவித்துள்ளார்.

மேற்காணும் புகார் குறித்து மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 1.12.2021 முதல் 31.12.2022 வரையிலான காலத்திற்குரிய அரகண்டநல்லூர் பேரூராட்சியின் Bank Payment Voucher Details அடங்கிய செலவினங்களின் விவரங்களை ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்க்காணும் விவரங்கள் தெரிய வருகிறது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கீழ்க்காணும் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

I) இலுப்பதோப்பு மேல்நீர்த்தேக்க தொட்டிக்கு பைப்லன் சீர் செய்ய உதிரிப்பொருட்கள் வாங்கியதில் மற்றும் பழுது பார்க்கப்பட்டதில் பின்வரும் பட்டியலில்படி செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

01.12.2021 அன்று ரூ. 9754/– (Chalan No. 391)
02.12.2021 அன்று ரூ. 9200/– (Chalan No. 397)
02.12.2021 அன்று ரூ. 9200/– (Chalan No. 401)
02.12.2021 அன்று ரூ. 9703/– (Chalan No. 405)
02.12.2021 அன்று ரூ. 9729/– (Chalan No. 407)
03.12.2021 அன்று ரூ. 9200/– (Chalan No. 410)
03.12.2021 அன்று ரூ. 9555/– (Chalan No. 415)
03.12.2021 அன்று ரூ. 9736/– (Chalan No. 417)
06.12.2021 அன்று ரூ. 9555/– (Chalan No. 421)
06.12.2021 அன்று ரூ. 9712/– (Chalan No. 428)
08.12.2021 அன்று ரூ. 9500/– (Chalan No. 433)

09.12.2021 அன்று ரூ. 7600/– (Chalan No. 437)
10.12.2021 அன்று ரூ. 9450/– (Chalan No. 443)
14.12.2021 அன்று ரூ. 8750/– (Chalan No. 446)
16.12.2021 அன்று ரூ. 9450/– (Chalan No. 449)
17.12.2021 அன்று ரூ. 8750/– (Chalan No. 452)
17.12.2021 அன்று ரூ. 9250/– (Chalan No. 455)
22.12.2021 அன்று ரூ. 9250/– (Chalan No. 459)
23.12.2021 அன்று ரூ. 9584/– (Chalan No. 464)
24.12.2021 அன்று ரூ. 9722/– (Chalan No. 468)
24.12.2021 அன்று ரூ. 8550/– (Chalan No. 469)
27.12.2021 அன்று ரூ. 7600/– (Chalan No. 472)

II) இலுப்பதோப்பு மின்மோட்டர் பழுதினை சீர்செய்தும் மற்றும் குடிநீர் பைப்லைன்கள் பழுதாகியதால் குடிநீர் டேங்க் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கியதில்

02.12.2021 அன்று ரூ. 4087/– (Chalan No. 400)
02.12.2021 அன்று ரூ. 9800/– (Chalan No. 406)
03.12.2021 அன்று ரூ. 9192/– (Chalan No. 408)
06.12.2021 அன்று ரூ. 9016/– (Chalan No. 419)
06.12.2021 அன்று ரூ. 9100/– (Chalan No. 427)

III) டெங்கு காய்ச்சல் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில்

01.12.2021 அன்று ரூ. 9389/– (Chalan No. 394)
02.12.2021 அன்று ரூ. 9379/– (Chalan No. 403)
06.12.2021 அன்று ரூ. 8904/– (Chalan No. 429)
09.12.2021 அன்று ரூ. 9114/– (Chalan No. 438)
17.12.2021 அன்று ரூ. 9114/– (Chalan No. 456)

IV) தெரு மின்விளக்கு உதிரிப்பொருட்கள் வாங்கியதில்

8.12.2021 அன்று ரூ. 9785/– (Chalan No. 435)
9.12.2021 அன்று ரூ. 9594/– (Chalan No. 439)
10.12.2021 அன்று ரூ. 8673/– (Chalan No. 442)
14.12.2021 அன்று ரூ. 9261/– (Chalan No. 448)
23.12.2021 அன்று ரூ. 9702/– (Chalan No. 465)
27.12.2021 அன்று ரூ. 9702/– (Chalan No. 470)
29.12.2021 அன்று ரூ. 9702/– (Chalan No. 479)

மேற்காணும் செலவினங்கள் போன்றே 1.1.2022 முதல் 31.12.2022 வரையிலான காலங்களில் பேரூராட்சியால் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டதையும் மனுதாரர் சமர்ப்பித்துள்ள செலவினப் பட்டியல்களின் மூலம் தெரிய வருகிறது.

அரகண்டநல்லூர் பேரூராட்சியில் 01.12.2021 முதல் 30.12.2022 வரையிலான காலங்களில் மேற்கொண்ட செலவினங்கள் பட்டியல்களின் மூலம் குடிநீர் பைப்லைன், தெருமின்விளக்கு, டெங்கு காய்ச்சல் முன்னெச்சரிக்கை தொடர்பான பொருட்கள் வாங்கப்பட்டதில் சுழற்சி முறையில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்கு மீண்டும் மீண்டும் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும், பேரூராட்சி பணியாளர்களின் ஊதியம் மற்றும் மின்கட்டணம் செலுத்தியது தவிர பிற செலவான இனங்கள் அனைத்தும் பேரூராட்சி செயல் அலுவலர் மேற்கொள்ளும் ஒரு நாள் செலவின வரம்பான ரூ.10,000/த்திற்கு கீழேயே செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும் தெரிய வருகிறது.

இவ்வாறு இருக்கும் நிலையில் மனுதாரர் திரு. எஸ். மோகன் என்பவர் மேற்காணும் செலவினம் தொடர்பாக 08.05.2023 அன்று பேரூராட்சிகளின் இயக்குநருக்கு புகார் மனு அளிக்கப்பட்டுள்ள நிலையில் அரகண்டநல்லூர் பேரூராட்சி மூலம் மனுதாரரிடம் 07.07.2023 அன்று நேரடி விசாரணை பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்டு 1.12.2021 முதல் 31.12.2022 வரையிலான செலவினங்கள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டதாகவும்; 07.07.2023 அன்றைய ஒரே நாளில் பேரூராட்சியின் செலவினங்கள் உண்மைத்தன்மை எனவும், எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என உணர்ந்து 07.07.2023 அன்றே இம்முறைமன்ற நடுவத்திற்கு கடிதம் மூலம் தவறுதலாக புகார் மனு அளித்துள்ளேன்; எனவே எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என தனது கடிதத்தில் தெரிவித்துள்ளதன் மூலம் அரகண்டநல்லூர் பேரூராட்சியில் பணியுரியும் அலுவலர்கள்/பணியாளர்கள் மற்றும் மனுதாரரும் உள்நோக்கத்துடன் நடந்து கொண்டுள்ளார்கள் என்கிற ஐயப்பாடு எழுகின்றது.

பேரூராட்சியால் புகாராக தெரிவிக்கப்பட்ட 1 வருட செலவினங்கள் 07.07.2023 அன்று ஒரே நாளில் மனுதாரருக்கு விளக்கம் அளிக்கப்பட்டதாக தெரிவிக்கும் பேரூராட்சி அலுவலர்கள், இம்முறைமன்ற நடுவ 2.8.2023அன்றைய நேரடி விசாரணையில் மனுதாரின் புகாரினை குறித்து எவ்வித விளக்கமும் அளிக்காமல் மனுதாரர் 07.07.2023 அன்று தெரிவித்த கருத்தினையே பேரூராட்சி செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் தெரிவித்து உள்ளார். 2021–22ஆம் ஆண்டில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். ஆனால் அதற்கான ஆதாரம் ஏதும் சமர்ப்பிக்க வில்லை. மனுதாரர் புகாராக தெரிவிக்கப்பட்ட செலவினமானது 2022–23ம் ஆண்டிற்கும் தொடர்புடையது என்பதால் 01.12.2021 முதல் 31.12.2022, 2021–22 மற்றும் 2022–23ஆம் ஆண்டிற்கான மனுதாரர் புகாராக தெரிவித்த செலவினங்கள் குறித்து உரிய ஆவணங்களைத் தணிக்கை செய்தால் மட்டுமே செலவினங்கள் தொடர்பான முறைகேடுகள் குறித்தான உண்மைநிலை தெரியவரும் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனவே அரகண்டநல்லூர் பேரூராட்சியில் மனுதாரர் திரு. எஸ். மோகன் என்பவரால் அளித்துள்ள புகார் தொடர்பான செலவினங்கள் குறித்து உள்ளாட்சிநிதித் தணிக்கைத்துறை மூலம் சிறப்பு தணிக்கை மேற்கொண்டு அதன் அறிக்கையினை 2 மாதக் காலத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

அரகண்டநல்லூர் பேரூராட்சியில் மேற்கொண்டுள்ள செலவினங்களில் ஏதேனும் முறைகேடுகளோ மற்றும் பேரூராட்சிக்கு நிதியிழப்போ நடைபெற்றுள்ளதாக

தணிக்கை அறிக்கை மூலம் கண்டறியப்பட்டால் 2021–22 மற்றும் 2022–23 ஆம் ஆண்டில் பணியாற்றிய செயல் அலுவலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மீதும் உரிய ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மனுதாரால் இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனு அளித்துள்ள நிலையில், அம்மனு மீது 02.08.2023 மற்றும் 08.08.2023 அன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜராகாமல் இரு சந்தர்ப்பங்கள் மனுதாருக்கு அளிக்கப்பட்டும், விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்ததை இம்முறைமன்ற நடுவத்தின் மாண்பமை குறைக்கும் செயலாகக் கருதி இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது. எனவே இம்முறைமன்ற நடுவத்தின் நேரத்தை வீணடித்ததை கருத்தில் கொண்டு மனுதாரர் திரு. எஸ்.மோகன் என்பவரால் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கப்படும் புகார் மனுக்கள் 6 (ஆறு) மாத காலத்திற்கு ஏற்கப்படாது என முடிவு செய்து, அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 23 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்./–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1) திரு. எஸ். மோகன்,
கதவு எண் 158/219,
அரகண்டநல்லூர், கண்டாச்சிபுரம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்

2) செயல் அலுவலர்,
அரகண்டநல்லூர் பேரூராட்சி,
விழுப்புரம் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
சென்னை–600 035

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர்
(Nodal Officer)(பெயரிடப்பட்ட உரையில்)
ராஜா அண்ணாமலைபுரம் சென்னை –600 028.

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்